**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை – திரு. S.முகமது யூசுப் நவாஸ், B.A.,B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை**

**2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண். 104/2017**
**CNR No: TNSV08-000112-2017**

ராஜாமணி ..... வாதி

**/ எதிர் /**

1.கயல்விழி
2.பாலமுருகன்
3.ராக்கு ..... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 31.07.2017 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு கோப்புக்கு எடுக்கப்பட்டு 31.08.2017 ம் தேதியன்று வழக்கு வாய்தாவிற்கு எடுக்கப்பட்டு 27.04.2026 ம் தேதியன்று என் முன்னால் விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கணேசன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

தாவா சொத்தை வாதி அமைதியாக அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்வகை ஆட்களோ, ஏஜெண்டுகளோ எவ்விதத்திலும் தடையோ, இடைஞ்சலோ செய்யக்கூடாது என பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை கோரியும் வாதியால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) வழக்குரையின் சுருக்கம்:</u>**

தாவா சொத்தின் சர்வே எண்.149/6 பி, விஸ்தீர்ணம் 7 செண்ட் என்றும், தாவா சொத்தை கடந்த 12.04.2017 ம் தேதி வாதி சரியான பிரதிபிரயோஜனத்திற்கு முருகேசன் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கியதாகவும், வாதிக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்த முருகேசன்

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.30 18:21:14 +0530

என்பவரின் தாயார் வள்ளி என்பவரும், 3ம் பிரதிவாதியும் உடன் பிறந்த சகோதரிகள் என்றும், மேற்படியார்களுக்குள் 1983ம் வருடம் பாகம் ஏற்பட்டு தாவா சொத்து வள்ளிக்கு கிடைக்கப்பெற்று பட்டா ஏற்பட்டு, வள்ளி இறந்த பிறகு தாவா சொத்து உள்ளிட்ட இன்ன பிற சொத்துக்களும் முருகேசன் என்பவருக்கு வாரிசு கிரம அடிப்படையில் கிடைக்கப்பெற்று அவரது பெயரில் பட்டாவும் ஏற்பட்டிருந்ததாகவும், அந்த பட்டா எண்.785ல் கண்ட சொத்துக்களில் வாதி தாவா சொத்தை மட்டும் கிரையம் வாங்கி தனது பெயருக்கு பட்டா மாறுதல் செய்து அனுபவம் செய்து வருவதாகவும், தாவா சொத்தில் கிணறு, மோட்டார் பம்செட் மற்றும் மோட்டார் அறை உள்ளதாகவும், அந்த கிணறு மூலமாக தண்ணீரை வாதி விவசாயத்திற்கு பயன்படுத்தி அனுபவம் செய்து வருவதாகவும், தாவா சொத்திற்கு மேற்கு, வடக்கு, தெற்கேயுள்ள சர்வே எண்.149/6ஏ என்பது 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்படி இடத்தினை 3ம் பிரதிவாதியிடமிருந்து, 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றும், அந்த கிரைய பத்திரத்தில் சர்வே எண்.149/6ஏ–ல் கிணறு, மோட்டார் பம்செட், மோட்டார் அறை, மின்இணைப்பு உள்ளது போன்று தவறுதலாக சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், 1ம் பிரதிவாதியின் கணவர் தான் 2ம் பிரதிவாதி என்றும், பிரதிவாதிகள் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட தவறான கிரைய பத்திரம் மூலம் தாவா சொத்தை வாதி அமைதியாக அனுபவம் செய்து வருவதை தடைசெய்ய போவதாக கடந்த 28.07.2017ம் தேதி முதல் பிரஸ்தாபம் செய்து வருவதாகவும், எனவே தாவா சொத்தை வாதி அமைதியாக அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்வகை ஆட்களோ, அதிகார முகவர்களோ எவ்விதத்திலும் தடையும், இடையூறும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) எதிர்வழக்குரையின் சுருக்கம்:-</u>**

இந்த பிரதிவாதிகளால் உண்மையென ஒப்புக் கொள்ளப்படும் சங்கதிகள் தவிர்த்து பிறயாவையும் வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், புலஎண்.149/6 என்ற சொத்து ஆதியில் சி.சோனைமுத்து செட்டியார் வகையறாவிற்கு பாத்தியப்பட்டு, அவர்களிடமிருந்து முத்துராஜா தேவர் என்பவர் 25.06.1965ம் தேதி கிரையம் பெற்று அனுபவித்து வந்தார் என்றும், மேற்படி கிரைய ஆவணத்தில்

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.30 18:21:32 +0530

புலஎண்.149/6 என்பதற்கு பதிலாக தவறுதலாக புலஎண்.176/2 என்று எழுதப்பட்டாலும், விஸ்தீர்ணம் மற்றும் நான்குமால்கள் ஸ்தலத்தில் உள்ளபடியும், வருவாய்துறை ஆவணங்களின் படியும் சரியாக இருந்ததில், சர்வே எண் மட்டும் தவறுதலாக இருந்ததை 16.09.1965 ல் திருத்தல் பத்திரம் மூலம் பதிவு செய்து தொடர்ந்து முத்துராஜாதேவர் அனுபவித்து வந்த மேற்படி சொத்தை 3ம் பிரதிவாதி ராக்கு, முத்துராஜா தேவரிடமிருந்து 20.10.1980ம் தேதிய கிரைய ஒப்பந்தத்தின் மூலம் கிரையம் பெற்று அனுபவித்து வந்ததன் அடிப்படையில் UDR திட்டத்தில் ராக்கு பெயருக்கு பட்டா எண்.390 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ராக்கு பெயருக்கு தனித்த பட்டா வழங்கப்பட வேண்டிய நிலையில் சு.வள்ளி என்ற நபர் பெயரும் தவறுதலாக சேர்க்கப்பட்டு விட்டதாகவும், மேற்படி சொத்தில் சு.வள்ளி என்பவருக்கோ அல்லது க.வள்ளி என்பவருக்கோ யாதொரு பாத்திய அனுபவம் எக்காலத்திலும் இல்லை என்றும், கரு.வள்ளி என்பவரும் 01.06.1983 லேயே இறந்துவிட்டார் என்றும், இந்நிலையில் சர்வே எண்.149/6ம் TK.8A–91/97, dt.14.04.1988 ன் படி தவறாகவும், மோசடியாகவும் சப்டிவிஷன் செய்யப்பட்டுள்ளதாகவும், புலஎண்.149/6 என்பது 149/6ஏ மற்றும் 149/6பி என தவறாக சப்டிவிசன் செய்யப்பட்டாலும் அதிலுள்ள கிணறு மற்றும் மின்மோட்டார் பம்புசெட் 3ம் பிரதிவாதி ராக்குவின் பெயருக்கு மாற்றிக்கொள்ள முத்துராஜாதேவர் 12.07.1996 ல் சம்மத உடன்படிக்கையும் எழுதி கொடுத்துள்ளார் என்றும், மேற்படி சொத்திற்கு சம்பந்தமில்லாத கரு.வள்ளி என்பவர் பெயருக்கும் தவறுதலாக மாறுதல் செய்யப்பட்டதற்கு பிரதிவாதி சிவகங்கை மாவட்ட ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்த மனுவும் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியரிடம் ந.க.அ3/1788/2017 என நிலுவையில் உள்ளதாகவும், 12.04.2017ம் தேதிய பத்திரத்தில் கிணறு, மின்மோட்டார் பம்புசெட் உள்ளதாக ராஜாமணி என்பவர் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கேவியட் மனு எண்.46/2017 மனுவில் புலஎண்.149/6பி–ல் இருப்பதாக காட்டவில்லை என்றும், கிணறு, மின்மோட்டார் பம்புசெட் வில்லங்க சான்றிதழின் படி புலஎண்.149/6ஏ–ல் தான் அடங்குகிறது என்றும், தாவா சொத்து பிரதிவாதிக்கு கிரைய பாத்தியமாக உள்ளநிலையில், வாதி தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி தவறு என்றும், எனவே தாவா வழக்கை தனது தரப்பு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.30 18:21:42 +0530

**3)** வாதி தரப்பில் சாட்சியாக வாதி ராஜாமணி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டும், அவரின் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சங்கர் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டும், அவரின் மூலம் சான்றாவணங்கள் குறியீடு இல்லை. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியாக 2ம் பிரதிவாதி பாலமுருகன் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டும், அவரின் மூலம் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.19 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேநாட்டான் என்பவர் பி.வா.சா.2 ஆகவும், சிவக்குமார் என்பவர் பி.வா.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டும், அவர்களின் மூலம் சான்றாவணங்கள் குறியீடு இல்லை. நீதிமன்ற சான்றாவணம் நீ.ம.சா.ஆ.1 மற்றும் 2ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4) <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய எழுவினாக்கள் யாதெனில்,</u>**

| | |
|---|---|
| 1 | Whether the plaintiff is entitled for the relief of permanent injunction as prayed for ? |
| 2 | To what other relief ? |

**5) <u>எழுவினா 1-க்கான தீர்வு: Whether the plaintiff is entitled for the relief of permanent injunction as prayed for ?</u>**

**5.1)** வாதி தாவா சொத்தை கடந்த 12.04.2017ம் தேதி வாதி சரியான பிரதிபிரயோஜனத்திற்கு முருகேசன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார். தாவா சொத்து முருகேசனுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்கு தாவா சொத்து முருகேசன் என்பவரின் தாயார் வள்ளி என்பவரும், 3ம் பிரதிவாதியும் சகோதரிகள் ஆவார்கள் என்றும், அவர்களுக்குள் கடந்த 1983ம் வருடம் பாகம் ஏற்பட்டு பாகத்தில் தாவா சொத்து வள்ளிக்கு கிடைக்கப் பெற்றதாகவும், வள்ளி இறந்த பிறகு தாவா சொத்து முருகேசன் என்பவருக்கு வாரிசு கிரமப்படி கிடைக்கப்பெற்று, அதனடிப்படையில் முருகேசன் என்பவரிடமிருந்து வாதி கிரையம் பெற்றதாகவும் தெரிவித்துள்ளார்.

**5.2)** இந்நிலையில் தாவா சொத்திற்கு அருகில் உள்ள புலஎண்.149/6ஏ சொத்தை 3ம் பிரதிவாதியிடமிருந்து,

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.30 18:21:55 +0530

1ம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளதாகவும், பிரதிவாதிகள் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட தவறான கிரைய பத்திரம் மூலம் தாவா சொத்தை வாதி அமைதியாக அனுபவம் செய்து வருவதை தடைசெய்ய போவதாக மிரட்டுவதாகவும், எனவே பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.3)** அதேசமயம் பிரதிவாதிகள் தரப்பு வழக்குபடி ..."தாவா சொத்து உள்ளிட்ட மொத்த சொத்தும் புலஎண்.149/6 ஆதியில் சோனைமுத்து செட்டியார் வகையறாவிற்கு பாத்தியப்பட்டு அவரிடமிருந்து முத்துராஜா தேவர் 25.06.1965ம் தேதி கிரையம் பெற்று அனுபவித்து வந்ததாகவும், மேற்படி கிரைய ஆவணத்தில் புலஎண்.149/6 என்பதற்கு பதிலாக தவறுதலாக புலஎண்.176/2 என்று எழுதப்பட்டாலும், விஸ்தீர்ணம் மற்றும் நான்குமால்கள் ஸ்தலத்தில் உள்ளபடியும், வருவாய்துறை ஆவணங்களின் படியும் சரியாக இருந்ததில், சர்வே எண் மட்டும் தவறுதலாக இருந்ததை திருத்தம் செய்ய 16.09.1965ல் சீர்திருத்த பத்திரம் முத்துராஜாதேவர் அவர்களுக்கு திருத்தல் பத்திரம் மூலம் பதிவு செய்து தொடர்ந்து மேற்படி சொத்தை முத்துராஜாதேவருக்கு, சோனைமுத்து செட்டியார் வகையறாவால் எழுதி கொடுக்கப்பட்டு தாவா சொத்து உள்ளிட்ட புலஎண்.149/6 மொத்த சொத்தையும் அனுபவித்து வந்தார்.

**5.4)** இந்நிலையில் தாவா சொத்து உள்ளிட்ட மொத்த சொத்தான புலஎண்.149/6 முழுவதையும் முத்துராஜா தேவரிடமிருந்து 20.10.1980ம் தேதியன்று 3ம் பிரதிவாதி ராக்கு கிரைய ஒப்பந்தத்தின் மூலம் கிரையம் பெற்று அனுபவித்து வந்ததன் அடிப்படையில் UDR திட்டத்தில் ராக்கு பெயருக்கு புலஎண். 149/6 முழுசொத்துக்கும் பட்டா எண்.390 பட்டா பதிவாகியுள்ளதாகவும், அந்தசமயத்தில் தவறுதலாக சு.வள்ளி என்ற பெயரும் சேர்க்கப்பட்டு விட்டதாகவும், அந்த தவறை திருத்தம் செய்ய 3ம் பிரதிவாதி படிப்பறிவு இல்லாததால் யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், மேற்படி சொத்தில் சு.வள்ளி என்பவருக்கோ

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.30 18:22:02 +0530

அல்லது க.வள்ளி என்பவருக்கோ யாதொரு பாத்திய அனுபவம் எக்காலத்திலும் இல்லை என்றும், கரு.வள்ளி என்பவரும் 01.06.1983 லேயே இறந்துவிட்டார் என்றும், 1988 ல் மானாமதுரை தாலுகா அலுவலக TK.8A– 91/97, dt.14.04.1988 ன் கோப்பு நடவடிக்கை மூலம் உட்பிரிவு செய்யப்பட்டு புலஎண்.149/6A பட்டா எண்.450 ராக்கு என்றும், புலஎண்.149/6B பட்டா எண்.451 வள்ளி என்றும் மோசடியாக பட்டா மாறுதலும் வள்ளி மகன் முருகேசனால் பட்டா மாறுதல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி மோசடி பட்டாவை பயன்படுத்தி புலஎண்.149/6B–க்கு முருகேசன் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டதை ஆய்வு செய்யும் பட்சத்தில் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்பது தெரியவரும்"... என்றும் தெரிவித்துள்ளார்.

**5.5)** மேலும் தாவா சொத்து ஸ்தலத்தில் அப்படி ஒரு சொத்து இல்லை என்றும், பிராதில் நான்குமால்கள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், முருகேசனுக்கு எக்காலத்திலும் பாத்தியம் இல்லை என்றும், தாவா சொத்தை வாதிக்கு கிரையம் கொடுத்த முருகேசன் தாயார் வள்ளி என்பவருக்கும், இவ்வழக்கின் 3ம் பிரதிவாதி ராக்குவிற்கும் கூட்டு பாத்தியமாக இருந்து, அதனடிப்படையில் பாகப்பிரிவினை நடைபெற்றதாக சொல்வது கிடையாது என்றும் பிரதிவாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

5.6) **மேலும் வாதி தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பது பிரதிவாதிகள் தரப்பில் மிக முக்கிய வாதமாக முன்வைக்கப்பட்டது.**

**1.** இவ்வழக்கை பொறுத்தவரை இந்நீதிமன்றம் மிக முக்கியமாக முடிவு செய்ய வேண்டியது அனுபவத்தின் அடிப்படையில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை மட்டும் இவ்வழக்கில் வாதிக்கு வழங்க இயலுமா ?

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.30 18:22:10 +0530

2. பிரதிவாதிகள், வாதியின் உரிமைமூலத்தை (Title) வெறும் Denial மட்டும் செய்துள்ளார்களா ? அல்லது

3. தாவா சொத்து தங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஏதேனும் சாட்சிய, சான்றாவணங்கள் தாக்கல் செய்துள்ளார்களா? அல்லது

4. இவ்வழக்கில் உரிமைமூலத்தை முடிவு செய்யாமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் வழங்க இயலுமா? என்பது போன்ற கேள்விகளை இந்நீதிமன்றம் கவனமுடன் ஆராய்கையில்,

5. இவ்வழக்கில் Title Cloud உள்ளதா அல்லது Title மிக தெளிவாக வாதிக்கு உள்ளதா? என்பதை இருதரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் இந்நீதிமன்றம் ஆய்வு செய்து முடிவு செய்தால் தான், இவ்வழக்கில் வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோர இயலுமா? அல்லது விளம்புகை பரிகாரம் கோரிவிட்டு தான் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலுமா? என்பதை இந்நீதிமன்றம் கவனமுடன் ஆராய்கையில், வாதி தரப்பு சான்றாவணம் வா.சா.ஆ.1ன் படி தாவா சொத்தான புலஎண்.149/6பி விஸ்தீர்ணம் 7 சென்டை வாதி, முருகேசன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளதாக தெரிகிறது.

6. ஆனால் அதேசமயம் பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்து முருகேசனுக்கு எந்த காலத்திலும் பாத்தியப்பட்டது இல்லை என்றும், தாவா சொத்தை வாதிக்கு கிரையம் கொடுத்த முருகேசனின் தாயார் வள்ளி என்பவருக்கும், இவ்வழக்கின் 3ம் பிரதிவாதி ராக்குவிற்கும் கூட்டு பாத்தியமாக இருந்து, அதனடிப்படையில் பாகவிஸ்தி ஏற்பட்டதாக கூறுவதை பிரதிவாதிகள் மறுத்துள்ள நிலையிலும்,

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.30 18:22:23 +0530

7. இவ்வழக்கில் முக்கியமாக Source of Title ஐ பிரதிவாதிகள் மறுத்துள்ள நிலையிலும், அவ்வாறு பாகப்பிரிவினை ஏற்பட்டது என்பதையும், அந்த பாகப்பிரிவினைக்கு முந்தைய ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து Cloud Title–அல்ல, Clear Title தனக்கு உள்ளது என்பதை நிரூபிக்கும் சுமை (Burden of Proof) வாதி தரப்பையே சாரும்.

8. மேலும் வள்ளி தாவா சொத்தை எந்த ஆவணத்தின் வழியாக கிரையம் பெற்றார் என்பதையும் நிரூபிக்கும் சுமை வாதி தரப்பையே சாரும்.

9. மேலும் வள்ளி இறந்த பிறகு புலஎண்.149/6 க்கு 3 ம் பிரதிவாதி ராக்கு பெயரில் பட்டா ஏற்பட்டு TK.8A–91/97, dt.14.04.1988 கோப்பு நடவடிக்கை மூலம் உட்பிரிவு செய்து புலஎண்.149/6A ராக்கு பெயரிலும், புலஎண்.149/6B வள்ளி பெயரிலும் ஏற்பட்டுள்ளதாக வாதி தரப்பு தெரிவித்துள்ள நிலையில்,

10. உரிமைமூலம் ஆவணமின்றி மோசடியாக மேற்படி பட்டா மாறுதல் உத்தரவு ஏற்பட்டுள்ளதாக பிரதிவாதிகள் கட்சி செய்துள்ள நிலையிலும், அதனடிப்படையில் பி.வா.சா.ஆ.15, 16 ன் படி பிரதிவாதிகள் மேற்படி பட்டா மாறுதல் உத்தரவை Challenge செய்துள்ளநிலையிலும்,

11. மேற்படி பட்டா மாறுதல் உத்தரவிற்கு எதிராக பட்டா மாறுதல் உத்தரவு குறித்து உரிய விசாரணை அமைப்பு பி.வா.சா.ஆ.17 மூலம் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள நிலையிலும், மேற்படி பட்டா மாறுதல் உத்தரவின் அடிப்படையில் மட்டும் அல்லாமல் சங்கிலி கோர்வையாக தாவா சொத்தில் தனக்கு Absolute Title உள்ளது என்பதை உரிமைமூல ஆவணங்கள் மூலம் வாதி தரப்பு தனது

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.30 18:22:36 +0530

வழக்கை நிரூபிக்காமல் எவ்வாறு முழுமையான Title உள்ளதாக ஏற்க இயலும்.

5.7) மேலும் பட்டா என்பது என்பது சில விதிவிலக்கான சூழ்நிலைகள் தவிர, வருவாய்துறை ஆவணமே தவிர அதை வைத்து சொத்தில் ஒருவருடைய உரிமைமூலத்தை தீர்மானிக்க முடியாது.

கீழ்கண்ட மேன்மை பொருந்திய மேல்நீதிமன்ற முன்தீர்ப்புபை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

**Patta is not a Title deed**

**1) 1999 (III) CTC 650**

**Patta : Whether constitutes documents of title plaintiff relying – on order passed by Tahsildar for transfer of patta – No material produced to show as to how Tahsildar came to such conclusion – Mutation of entries are done to enable state to collect revenue from persons who are in possession of property – patta is not document of title.**

**2) 1999 (III) CTC 304**

**Kammavar Sangam Through its**
**Secretary R.Krishnasamy /Vs./ Mani Janagarajan**

**Patta and Title - Plaintiff seeking declaration of title and consequential injunction plaintiff relying on Patta issued which discloses that plaintiff got property by devolution of interest – Plaintiff pleading that he got suit property from his grand father by devolution – plaintiff not producing any document to prove antecedent title of his grandfather – Reliance on patta cannot be made to prove titled as patta which mutates entires cannot convey or extinguish right over property – Suit for declaration has to be dismissed.**

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.30 18:22:50 +0530

5.8) வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் தாவா சொத்தின் உரிமைமூலம் தன்னிடம் வந்துவிட்டதாக வாதி கட்சி செய்துள்ள நிலையிலும், பி.வா.சா.ஆ.14 ன் மூலம் தாவா சொத்தின் உரிமைமூலம் தங்களிடம் உள்ளதாக பிரதிவாதிகள் கட்சி செய்துள்ள நிலையிலும், இவ்வழக்கில் இந்நீதிமன்றம் முழுமையாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்குவதற்கு முன்பு Title ஐ முடிவு செய்வது மிக மிக அவசியமாகும்.

5.9) இவ்வழக்கில் வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.14 ம் முறையாக பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரங்களாக உள்ள நிலையில், இவ்வழக்கில் வாதிக்கு உரிமைமூலம் உள்ளதா அல்லது பிரதிவாதிகளுக்கு உரிமைமூலம் உள்ளதா என்பதை பொறுத்தவரை இவ்வழக்கு முழுமையாக Cloud Title வழக்காகும். எனவே இவ்வழக்கில் Absolute Title உள்ளதாக வாதி தரப்பு வழக்கு அமைந்தால் தான் நேரடியாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர முடியும்.

5.10) ஏனெனில் பிரதிவாதிகள், வாதியின் Title–ஐ வெறும் Denial மட்டும் செய்யாமல் தாவா சொத்தின் உரிமைமூலம் தங்களுக்கு பாத்தியப்பட்டது என்று ஆவணங்களை தாக்கல் செய்துள்ள நிலையிலும், 3 ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தின் முழுமையான உரிமைமூலம் எவ்வாறு வந்தது என்பதற்குரிய முந்தைய ஆவணங்களை (Source of Title Document) வாதி தரப்பு தாக்கல் செய்யாதநிலையிலும், இவ்வழக்கில் Title–ஐ முடிவு செய்யாமல் வாதிக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

5.11) கீழ்கண்ட மேன்மை பொருந்திய உச்சநீதிமன்றம் வழங்கிய முன்தீர்ப்பு இந்த எழுவினாவை முடிவு செய்வதற்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.30 18:23:02 +0530

**Anathula Sudhakar vs P. Buchi Reddy (Dead) By Lrs & Ors**
**Bench: R. V. Raveendran, P. Sathasivam**

**CASE NO.: Appeal (civil) 6191 of 2001**

**DATE OF JUDGMENT: 25/03/2008**

To summarize, the position in regard to suits for prohibitory injunction relating to immovable property, is as under :

(**a**) Where a cloud is raised over plaintiff's title and he does not have possession, a suit for declaration and possession, with or without a consequential injunction, is the remedy. Where the plaintiff's title is not in dispute or under a cloud, but he is out of possession, he has to sue for possession with a consequential injunction. Where there is merely an interference with plaintiff's lawful possession or threat of dispossession, it is sufficient to sue for an injunction simpliciter.

(**b**) As a suit for injunction simpliciter is concerned only with possession, normally the issue of title will not be directly and substantially in issue. The prayer for injunction will be decided with reference to the finding on possession. But in cases where de jure possession has to be established on the basis of title to the property, as in the case of vacant sites, the issue of title may directly and substantially arise for consideration, as without a finding thereon, it will not be possible to decide the issue of possession.

(**c**) But a finding on title cannot be recorded in a suit for injunction, unless there are necessary pleadings and appropriate issue regarding title [either specific, or implied as noticed in Annaimuthu Thevar (supra)]. Where the averments regarding title are absent in a plaint and where there is no issue relating to title, the court will not investigate or examine or render a finding on a question of title, in a suit for injunction. Even where there are necessary pleadings and issue, if the matter involves complicated questions

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.30 18:23:10 +0530

of fact and law relating to title, the court will relegate the parties to the remedy by way of comprehensive suit for declaration of title, instead of deciding the issue in a suit for mere injunction.

(**d**) Where there are necessary pleadings regarding title, and appropriate issue relating to title on which parties lead evidence, if the matter involved is simple and straight-forward, the court may decide upon the issue regarding title, even in a suit for injunction. But such cases, are the exception to the normal rule that question of title will not be decided in suits for injunction. But persons having clear title and possession suing for injunction, should not be driven to the costlier and more cumbersome remedy of a suit for declaration, merely because some meddler vexatiously or wrongfully makes a claim or tries to encroach upon his property. The court should use its discretion carefully to identify cases where it will enquire into title and cases where it will refer to plaintiff to a more comprehensive declaratory suit, depending upon the facts of the case.

**5.12)** மேலும் வாதி தரப்பில் பட்டா மாறுதல் உத்தரவு வா.சா.ஆ.2 தாக்கல் செய்துள்ள நிலையில், எதனடிப்படையில் பட்டா மாறுதல் உத்தரவு ஏற்பட்டது என்பதற்குரிய எவ்வித விளக்கங்களும் வாதி தரப்பில் இல்லை.

**5.13)** ...*"இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 104-ன் படி ஒரு பொருண்மையை குறித்துச் சாட்சியமளிக்க ஏதாவது ஒரு நபரை இயலுமாறு செய்யும் பொருட்டு வேறு ஏதாவது ஒரு பொருண்மையை மெய்ப்பிக்க வேண்டியது தேவையாக இருப்பின், அந்தப் பொருண்மையை மெய்ப்பிக்கும் சுமையானது, அத்தகைய சாட்சியத்தை அளிக்க விரும்பும் நபரின் மீது உள்ளது"*...

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.30 18:23:17 +0530

5.14) மேலும் வா.சா.ஆ.2 ஐ பொறுத்து இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 104ன் படி எதனடிப்படையில், எவ்வாறு பட்டா மாறுதல் உத்தரவு ஏற்பட்டது என்பதற்குரிய முந்தைய பொருண்மையை நிரூபிக்கும் சுமையிலிருந்து இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101 மற்றும் 102–லிருந்து வாதி தவறியதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

5.15) மேலும் தாவா சொத்தை வாதி கிரையம் பெற்ற கிரையபத்திரம் வா.சா.ஆ.1ன் படி அதில் வட்டகிணறு, மின்மோட்டார் ஆகியவைகள் புலஎண்.149/6Bல் காட்டப்பட்டுள்ள நிலையில், 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் பி.வா.சா.ஆ.14–லும் வட்டகிணறு, மின்மோட்டார் ஆகியவைகள் காட்டப்பட்டுள்ளது. **மேலும் வா.சா.ஆ.1–ஆவணம் 2017ம் ஆண்டு எழுதப்பட்டுள்ளநிலையில், பி.வா.சா.ஆ.14– ஆவணம் 2016ம் ஆண்டு எழுதப்பட்டுள்ளது.**

5.16) மேலும் புலஎண்.149/6 உட்பிரிவே கேள்விகுறியாகி RDO உத்தரவிற்கு எதிராக DRO நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் Challenge செய்துள்ள நிலையில், வழக்கறிஞர் ஆணையாளர் தாவா இடத்தை சென்று பார்த்து வந்த அறிக்கையை இந்நீதிமன்றம் ஏற்க இயலாது. ஏனெனில் உட்பிரிவு செய்யப்பட்ட புலஎண்.149/6A, புலஎண்.149/6B அடிப்படையில் தான் வழக்கறிஞர் ஆணையாளர் தாவா இடத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**5.17) வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வழக்கு ஆவணங்களையும், இருதரப்பு வாதங்களையும் இந்நீதிமன்றம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், இவ்வழக்கில் உரிமைமூலத்தை முடிவு செய்துவிட்டு பிறகு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்குவது தான் ஏற்புடையதாக இருக்கும்.**

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.30 18:23:26 +0530

**5.18) ஏனெனில் பிரதிவாதிகள் இவ்வழக்கில் வாதியின் உரிமை மூலத்தை Vague–ஆகவோ அல்லது Evasive–ஆகவோ வாதியின் உரிமை மூலத்தை Denial செய்யவில்லை. மாறாக தாவா சொத்தில் வாதியின் உரிமைமூலத்தின் Source–ஐ மறுத்து தங்களுக்கு தான் உரிமைமூலம் உள்ளது என்று பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் பி.வா.சா.ஆ.14 தாக்கல் செய்துள்ளார்கள்.**

**5.19) இந்நிலையில் வாதி தரப்பு** (Chain Link) **சங்கிலி கோர்வையாக** ***Preponderance of Probability*** **தாவா சொத்தில் தனது உரிமைமூலத்தை நிரூபிக்காமல் எவ்வாறு வெறும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோர இயலும் ?**

**5.20) மேற்கண்ட விவாதங்களின் படி இவ்வழக்கில் விளம்புகை பரிகாரம் கோராமல் வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ள காரணத்தால், வாதி கோரிய பரிகாரம் வழங்க இயலாது என்று இந்த 1ம் எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.**

**6) <u>எழுவினா 2-க்கான தீர்வு: To what other relief ?</u>**

முக்கிய பரிகாரங்கள் வழங்கப்படவில்லை. வேறு வகையான பரிகாரங்கள் தேவையில்லை.

இவ்வழக்கில் விவாதிக்கப்படாத ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் இவ்வழக்கில் பிரச்சனைக்குரிய பொருண்மைகளை முடிவு செய்வதுடன் பொருந்தி வரவில்லை. எனவே அவற்றை விவாதிக்க தேவையில்லை என்பதால் விவாதிக்கவில்லை.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.30 18:23:38 +0530

*“இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101-ன் படி மெய்ப்பிக்கும் சுமையானது யார் பிரச்சனையில் உள்ள ஒரு பொருளை வலியுறுத்துகிறாரோ அவர் மீது தான் உள்ளது. அதனை மறுப்பவர் மீது அல்ல. இந்த வழக்கில் வாதி தான் கேட்கும் பரிகாரத்திற்கு ஏற்ப தனது வழக்கை நிரூபிக்கவில்லையென்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.”*

*“மேலும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 102-ன் படி உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை ஒன்றில் மெய்ப்பிக்கும் சுமையானது இருதரப்பினராலுமே சாட்சியம் எதுவும் அளிக்கப்படவில்லையெனில் யார்தோல்வியுறுவாரோ அவர் மீது உள்ளது. அது அவரது வழக்கையே தோல்வியுறச் செய்யும். இந்த வழக்கை பொறுத்தவரை வாதி (Preponderance of Probability) தனது வழக்கை நிரூபிக்கவில்லையென்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.”*

*“மேலும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 104-ன் படி ஒரு பொருண்மையை குறித்துச் சாட்சியமளிக்க ஏதாவது ஒரு நபரை இயலுமாறு செய்யும் பொருட்டு வேறு ஏதாவது ஒரு பொருண்மையை மெய்ப்பிக்க வேண்டியது தேவையாக இருப்பின், அந்தப் பொருண்மையை மெய்ப்பிக்கும் சுமையானது, அத்தகைய சாட்சியத்தை அளிக்க விரும்பும் நபரின் மீது உள்ளது. இது இந்த வழக்கிற்கு பொருந்துவதாகவே உள்ளது.* அதனடிப்படையில் வாதி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 104ன் கீழ் *தனது* வழக்கை நிரூபிக்கவில்லையென்றே இந்நீதிமன்றம் *கருதுகிறது.”*

*“மேலும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 106-ன் படி ஏதாவது ஒரு நபரின் அறிவிற்கு மட்டுமே தனிச் சிறப்பாக தெரிந்துள்ள எந்த ஒரு பொருண்மையையும் மெய்ப்பிக்கும் சுமையானது அவர் மீது உள்ளது. இந்த வழக்கிற்கு இது பொருந்துவதாகவே உள்ளது.”* அதனடிப்படையில் வாதி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு.106-ன் கீழ் *தனது* வழக்கை நிரூபிக்கவில்லையென்றே இந்நீதிமன்றம் *இந்நீதிமன்றம் கருதுகிறது.”*

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.30 18:23:46 +0530

எனவே மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவுகள் 101, 102, 104 மற்றும் 106-ன் படி வாதி *தனது* தரப்பு வழக்கை நிரூபிக்கவில்லையென்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக இவ்வழக்கில் வாதி கோரிய பரிகாரங்கள் வழங்க இயலும் நிலையில் இல்லாததால் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.30 18:23:55 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**வாதி தரப்பு சாட்சிகள்**

வா.சா.1 – ராஜாமணி (வாதி)

வா.சா.2 – சங்கர்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 12.04.2017 | தாவா சொத்தை வாதி, முருகேசன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதற்கான கிரையபத்திரம் அசல் |
| வா.சா.ஆ.2 | 19.01.2017 | தாவா சொத்திற்கு முருகேசன் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா மாறுதல் உத்தரவு கணிணி நகல் |
| வா.சா.ஆ.3 | 27.04.2017 | தாவா சொத்திற்கு வாதி ராஜாமணி பெயரிலுள்ள பட்டா எண்.786 க்கான 10(1) கணிணி நகல் |
| வா.சா.ஆ.4 | 07.02.2017 | தாவா சொத்திற்கு முருகேசன் பெயரிலுள்ள வரி ரசீது அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.5 | 12.04.2017 | தாவா சொத்திற்கு முருகேசன் பெயரிலுள்ள பட்டா எண்.785 க்கான 10(1) கணிணி நகல் |
| வா.சா.ஆ.6 | 10.01.2017 | தாவா சொத்திற்கு வள்ளி என்பவர் பெயரிலுள்ள பட்டா எண்.451 க்கான 10(1) கணிணி நகல் |
| வா.சா.ஆ.7 | 14.03.2017 | முருகேசன் என்பவருக்கு, அரசனேந்தல் குரூப் VAO வழங்கிய தாவா சொத்திலுள்ள கிணற்றிற்கான உரிமைசான்று அசல் |
| வா.சா.ஆ.8 | 14.09.2016 | புலஎண்.149/6A–ஐ 1 ம் பிரதிவாதி, ராக்கு என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதற்கான கிரையபத்திரம் சார்பதிவக நகல் |
| வா.சா.ஆ.9 | 20.10.2016 | புலஎண்.149/6A–க்கான ராக்கு பெயரிலுள்ள பட்டா எண். 450 க்கான 10(1) கணிணி நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்**

பி.வா.சா.1 – பாலமுருகன் (2 ம் பிரதிவாதி)

பி.வா.சா.2 – மேநாட்டான்

பி.வா.சா.3 – சிவக்குமார்

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 25.06.1965 | தாவா சொத்து உள்ளிட்ட மொத்த சொத்தை சி.சோணைமுத்து செட்டியாரிடமிருந்து முத்துராஜாதேவர் கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரம் அசல் |
| பி.வா.சா.ஆ.2 | 16.09.1965 | மேற்படி கிரயப்பத்திரத்தில் சர்வே எண் தவறாக இருப்பதை சரி செய்து பதிவு செய்த திருத்தல் பத்திரம் சார்பதிவக சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.3 | 09.07.2017 | 1396 பசலியில் புலஎண்.149/6 க்கு ராக்கு பெயரில் பட்டா இருந்ததை காட்டக்கூடிய சாகுபடி அடங்கல் உண்மை நகல் |
| பி.வா.சா.ஆ.4 | 09.07.2017 | 1398 பசலியில் புலஎண்.149/6 ன் உட்பிரிவுகளை காட்டக்கூடிய சாகுபடி அடங்கல் உண்மை நகல் |
| பி.வா.சா.ஆ.5 | 09.07.2017 | 1397 பசலியில் புலஎண்.149/6A, 6B ஆக உட்பிரிவு செய்யப்பட்டதற்கான கோப்பு நடவடிக்கை மேற்குறிப்புடன் கூடிய சாகுபடி அடங்கல் உண்மை நகல் |
| பி.வா.சா.ஆ.6 | 17.10.2016 | 01.01.1987 முதல் 16.10.2016 வரைக்கான புலஎண்.149/6A-ன் வில்லங்க சான்று அசல் |
| பி.வா.சா.ஆ.7 | 20.02.2018 | 3 ம் பிரதிவாதி ராக்கு 01.01.1987 முதல் 19.02.2018 வரை புலஎண்.149/6A-க்கு பெற்ற வில்லங்க சான்று அசல் |

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.30 18:24:19 +0530

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.8 | 02.12.2025 | 01.01.1975 முதல் 01.12.2025 வரை புலஎண்.149/6A க்கு பெற்ற வில்லங்க சான்றிதழ் இணையவழி நகல் |
| பி.வா.சா.ஆ.9 | 22.09.2004 | ராக்கு என்பவர் பெயரில் உள்ள பட்டா எண்.450 – அசல் |
| பி.வா.சா.ஆ.10 | 02.12.2025 | ராக்கு பெயரில் உள்ள பட்டா எண்.450–க்கான 10 (1) கணிணி இணையவழி நகல் |
| பி.வா.சா.ஆ.11 | 24.04.2017 | 01.06.1983 ம் தேதியன்று வள்ளி என்பவர் இறந்ததற்கான இறப்புச் சான்றிதழ் அசல் |
| பி.வா.சா.ஆ.12 | 12.07.1996 | தாவா சொத்தில் உள்ள மின்இணைப்பை 3 ம் பிரதிவாதி ராக்குவிற்கு பெயர் மாற்றம் செய்ய சம்மதம் தெரிவித்து முத்துராஜாதேவர் எழுதிக்கொடுத்த சம்மத கடிதம் அசல் |
| பி.வா.சா.ஆ.13 | 20.08.2003 | தாவா சொத்திலுள்ள மின் இணைப்பு எண் 29 முத்துராஜாதேவர் பெயரிலிருந்து ராக்கு பெயருக்கு மாற்றி வழங்கப்பட்ட மின் கட்டண அட்டை அசல் |
| பி.வா.சா.ஆ.14 | 14.09.2016 | தாவா மொத்த சொத்தை 1 ம் பிரதிவாதி, 3 ம் பிரதிவாதியிடமிருந்து பதிவு கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரம் அசல் |
| பி.வா.சா.ஆ.15 | 14.07.2017 | 02.05.2017 ம் தேதி 1 ம் பிரதிவாதி மானாமதுரை வட்டாட்சியரிடம் கொடுத்த மனுவின் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டி மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நீதிப்பேராணை மனு W.P (MD) No.11264/2017 ன் உத்தரவு இணையவழி நகல் |
| பி.வா.சா.ஆ.16 | 22.05.2017 | கிரையப்பத்திரப்படி பட்டா மாறுதல் செய்யக்கோரி மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் 1 ம் பிரதிவாதி கொடுத்த மனு நகல் மற்றும் மனு ஏற்பு ரசீது ஒப்புகை சீட்டு – அசல் |
| பி.வா.சா.ஆ.17 | 01.12.2017 | 3 ம் பிரதிவாதி மனுவின் பேரில் விசாரணைக்கு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஆஜராகுமாறு வந்த குறிப்பாணை சார்பு நகல் |
| பி.வா.சா.ஆ.18 | 03.07.2017 | தாவா வழக்கிற்கு முன்பு வாதி சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கேவியட் மனு எண்.46/2017 ன் நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.19 | 22.11.2023 | பட்டா எண். 450 க்கு ராக்கு என்பவர் பெயரில் செலுத்தி உள்ள நிலவரி ரசீது அசல் |

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.30 18:24:27 +0530

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | 01.08.2025 | நீதிமன்ற ஆணையர் அறிக்கை |
| நீ.ம.சா.ஆ.2 | 01.08.2025 | நீதிமன்ற ஆணையர் வரைபடம் |

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.30 18:24:33 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**District Munsif Court**

**Manamadurai**

**OS.No. 104/2017**

**<u>Fair / Draft Judgment</u>**

**Dated 30.04.2026**